செ.வெ.எண்.133/2009(செமதொஅ) நாள் : 21.05.2009.

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.**

முன்னாள் பாரத பிரதமர் அமரர் இராஜீவ் காந்தியின் நினைவு நாளான மே 21ம் நாள் கொடுஞ்செயல் எதிர்ப்பு நாளாக நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதனையொட்டி, இன்று(21.5.2009) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே.மிஸ்ரா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் அரசு பணியாளர்கள் கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். மாவட்ட ஆட்சியர் அவர்கள் உறுதிமொழியினை முன்மொழிய, அதனைத் தொடர்ந்து அரசு அலுவலர்களும், பணியாளர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. யத்தீந்திரநாத் ஸ்வேன்,இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் ஆணையர் திரு. க.இராஜாராமன்,இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திரு. எல். சித்திரசேனன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ.நம்பிராசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொறுப்பு) திருமதி. ஆர். சாந்தகுமாரி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. எம்.ஆதிமூலம், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு. கோ. செந்தில்குமார், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு. த. காமாட்சி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. எம்.அசோகன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியிடுபவர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்.**